# QB365 Question Bank Software Study Material

## புவியியல் - தமிழ்நாடு - மானுடப் புவியியல் முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்(புத்தக & ஆக்கபூர்வமான வினாக்கள்)

## 10ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

**2 மதிப்பெண் வினாக்கள்**

15 x 2 = 30

1) தமிழ்நாட்டின் வேளாண் பருவக்காலங்களை எழுதுக.

**பதில் :** 1. சொர்ணவாரி பருவம் (சித்திரை பட்டம்) (ஏப்ரல்-மே)

2. சம்பா பருவம் (ஆடிப்பட்டம்) (ஜூலை-ஆகஸ்டு)

3. நவரை பருவம் (நவம்பர்-டிசம்பர்)

2) கோயம்புத்தூர் ஏன் "தென்னிந்தியாவின் மான்செஸ்டர்" என அழைக்கப்படுகிறது?

**பதில் :** 1. பருத்தி நெசவாலைகள் தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க நன்கு வளர்ந்த ஒரு தொழிலகமாகும்.

2. பருத்தி நெசவு ஆலைகள் கோயம்புத்தூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் செறிந்து காணப்படுகின்றன.

3. எனவே இது தமிழ்நாட்டின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படுகிறது.

3) தமிழ்நாட்டின் முக்கிய பல்நோக்குத் திட்டங்களின் பெயர்களை எழுதுக.

**பதில் :** 1. மேட்டூர் அணை

2. பவானி சாகர் அணை

3. அமராவதி அணை

4. கிருஷ்ணகிரி அணை

5. சாத்தனூர் அணை

6. முல்லைப் பெரியாறு அணை

7. மணிமுத்தாறு அணை

8. வைகை அணை

9. பாபநாசம் அணை

10. பரம்பிகுளம் ஆழியாறு திட்டம்

4) பறக்கும் தொடருந்துத் திட்டம் (MRTS) என்றால் என்ன?

**பதில் :** 1. பறக்கும் தொடருந்து திட்டம் என்பது நிலத்திலிருந்து உயரே கட்டப்பட்ட பாலத்தின்மேல் செல்லும் புறநகர் தொடருந்து சேவையைக் குறிக்கும். (MRTS-Mass Rapid Transit System).

2. போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் சென்னையில் பறக்கும் தொடருந்து திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

5) தமிழ்நாட்டின் விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களைப் பட்டியலிடுக.

**பதில் :** **விமான நிலையங்கள்:**

**(சர்வதேச விமான நிலையங்கள்)**

1. சென்னை

2. மதுரை

3. திருச்சிராப்பள்ளி 4. கோயம்புத்தூர் **(உள்நாட்டு விமான நிலையங்கள்)**

1. தூத்துக்குடி

2. சேலம்

**துறைமுகங்கள்:**

**(முக்கிய துறைமுகங்கள்)**

1. சென்னை

2. எண்ணூர்

3. தூத்துக்குடி

4. நாகப்பட்டினம் (இடைநிலை துறைமுகம்)

6) தமிழ்நாட்டில் அதிக நெல் உற்பத்தி செய்யும் மாவட்டங்கள் எவை?

**பதில் :** தமிழகம் முழுவதும் நெல் பயிரிட்டாலும் தஞ்சாவூர், திருவாரூர், திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் அதிக அளவில் பயிரிடப்படுகிறது.

7) தமிழ்நாட்டில் என்னென்ன பருப்பு வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன?

**பதில் :** 1) பருப்பு வகைகள் புரதத்தின் முக்கிய ஆதாரமாக உள்ளன. கொண்டைக்கடலை, உளுந்து, பச்சை பயிறு, துவரம் பருப்பு மற்றும் கொள்ளு ஆகியன தமிழ்நாட்டில் விளையும் முக்கிய பருப்பு வகைகளாகும்.
2) வறண்ட நிலப்பகுதிகளில் நீர்ப்பாசன வசதியுடனோ அல்லது நீர்பாசனமின்றியோ பயிரிடப்படுகிறன. மிதமான குளிர்கால நிலை மற்றும் குறைந்த மழைப்பொழிவு இங்கு பயிரிட உகந்த சுழல்களாகும்.
3) சென்னை, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைத் தவிர்த்து மற்ற மாவட்டங்களில் பருப்பு வகைகள் பயிரிடப்படுகின்றன.

8) ஆவின் குறிப்பு எழுதுக.

**பதில் :** தமிழ்நாடு பால்வளர்ச்சி கழகமான ஆவின் என்று அழைக்கப்படும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் என்ற புதிய அமைப்பாக பதிவு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

9) தோல் பதனிடும் தொழிலகங்கள் தமிழ்நாட்டில் எங்கெங்கு உள்ளன?

**பதில் :** வேலூர் மற்றும் அதனை சுற்றியுள்ள இராணிப்பேட்டை, ஆம்பூர் மற்றும் வாணியம்பாடி நகரங்களில் நூற்றுக்கணக்கான தோல் பதனிடும் தொழிலகங்கள் அமைந்துள்ளன.

10) தமிழ்நாட்டின் முக்கிய ஏற்றுமதிகள் யாவை?

**பதில் :** வேளாண் பொருட்கள், தோல் பொருட்கள், இரத்தின கற்கள் மற்றும் நகைகள், இரசாயன மற்றும் இரசாயன பொருட்கள் முதலியன ஆகும்.

11) வணிக பயிர்கள்

**பதில் :** இலாப நோக்கோடு விற்பனைக்காக பயிரிடப்படும் வேளாண் பயிர்கள்.

12) கசிதல்

**பதில் :** மழைக்காலங்களில், வழிந்தோடும் நீரினால் மண்ணிலுள்ள கரையும் தன்மையுள்ள தாதுக்கள் கரைக்கப்பட்டு அடுத்துச் சொல்லப்படுவதால் மண் செழிப்பற்றதாக உருவாகும் நிலை.

13) நீர் சந்தி (Strait)

**பதில் :** இரண்டு கடல்கள் அல்லது இரண்டு பெரிய நிர்ப்பரப்பினை இணைக்கும் ஒரு குறுகிய நிர்ப்பகுதி.

14) மானுடபுவியியல் என்றால் என்ன?

**பதில் :** மானுடபுவியியல் என்பது மனித சமுதாயம் வளர்ச்சி பெற்ற வழிமுறைகள் மற்றும் இயற்கை சூழலுடனான செயல்பாடுகள் குறித்து கற்றறிதல் ஆகும்.

15) தமிழ்நாட்டின் வேளாண் முறைகளின் வகைகள் யாவை?

**பதில் :** 1. தீவிர தன்னிறைவு வேளாண்மை
2. தோட்ட வேளாண்மை
3. கலப்பு வேளாண்மை

**5 மதிப்பெண் வினாக்கள்** 4 x 5 = 20

16) தமிழ்நாட்டின் தோட்ட வேளாண்மை பற்றி விளக்குக.

**பதில் :** 1. தேயிலை, காப்பி இரப்பர், முந்திரி மற்றும் சின்கோனா ஆகியன தமிழ்நாட்டின் முக்கிய தோட்டப் பயிர்களாகும்.
2. தோட்டப்பயிர்கள் தமிழ்நாட்டின் மேற்கு தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் சரிவுகளில் பயிரிடப்படுகின்றன.
3. இந்தியாவில் அசாம் மாநிலத்திற்கு அடுத்தபடியாக தமிழ்நாடு தேயிலை பயிரிடும் பரப்பு மற்றும் உற்பத்தியில் இரண்டாமிடம் வகிக்கிறது.
4. நீலகிரி மலைகள் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மலைகளில் தேயிலை தோட்டங்கள் காணப்படுகின்றன.
5. நீலகிரி மலைகள் மற்றும் சேலம் மாவட்டத்தில் உள்ள ஏற்காடு மலைச்சரிவுகளில் காப்பி குறிப்பிடத் தகுந்த அளவில் பயிரிடப்படுகிறது.
6. திண்டுக்கல், மதுரை மற்றும் தேனி மாவட்டங்களிலுள்ள மலைச்சரிவுகளிலும் காப்பி பயிரிடப்படுகின்றது.
7. காப்பி உற்பத்தியில் கர்நாடகா மாநிலத்திற்கு அடுத்து தமிழ்நாடு இரண்டாமிடம் வகிக்கிறது.
8. இரப்பர் தோட்டங்கள் கன்னியாகுமரியில் அதிகமாக காணப்படுகிறது.
9. தமிழ்நாட்டிலுள்ள மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகளின் சரிவுகளில் மிதவெப்பம் மற்றும் ஈரமான காலநிலை உள்ள பகுதிகளில் மிளகு விளைகின்றது.
10. கடலூர் மாவட்டத்தின் பெரும்பகுதிகளில் முந்திரி பயிரிடப்படுகின்றது.

17) தமிழ்நாட்டின் கனிம பரவலை விவரி.

**பதில் :** வெர்மிகுலைட், மேக்னடைட், டுனைட், ரூட்டில், செம்மணிக்கல், மாலிப் படினம் மற்றும் இல்மனைட் ஆகிய வளங்களில் தமிழ்நாடு முன்னணி உற்பத்தியாளராக உள்ளது.

**எரிபொருட்கள்:**

மாநிலத்தில் காணப்படும் முக்கியமான தாதுக்களில், நெய்வேலி மிகப்பெரிய அளவில் பழுப்பு நிலக்கரி வளங்களைக் கொண்டுள்ளது. இராமநாதபுரம் பகுதிகளில் நிலக்கரி படிமங்கள் காணப்படுகின்றன.
காவிரி வடிநிலப்பகுதியில் எண்ணெய் மற்றும் இயற்கை வாயு படிவுகள் காணப்படுகின்றன.

**இரும்பு:**

சேலம் மாவட்டத்திலுள்ள கஞ்சமலையிலும் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலையிலும் இரும்புத்தாது படிவுகள் காணப்படுகின்றன.

**மேக்னசைட்:**

சேலம் அருகே மேக்னசைட் தாது கிடைக்கின்றது.
கோயம்புத்தூர், தர்மபுரி, கரூர், நாமக்கல், நீலகிரி, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர் மாவட்டங்களில் மேக்னசைட் கிடைக்கிறது.

**பாக்சைட்:**

சேர்வராயன் குன்றுகள், கோத்தகிரி, உதகமண்டலம் பழனிமலை மற்றும் கொல்லிமலைப் பகுதிகளில் பாக்சைட் தாதுக்கள் காணப்படுகின்றன.

**ஜிப்சம்:**

திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ஜிப்சம் கிடைக்கிறது.

**இல்மனைட் :**

கன்னியாகுமரி கடற்கரை மணல் பரப்புகளில் இல்மனைட் மற்றும் ருட்டில் கானாப்படுகிறது.

**சுண்ணாம்புக்கல்:**

கோயம்புத்தூர், கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், கரூர், மதுரை, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், இராமநாதபுரம், சேலம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் சுண்ணாம்புக்கல் கிடைக்கிறது.

**பிற உலோகங்கள்:**

பெல்ட்ஸ்பார்க், படிகக்கல், தாமிரம் மற்றும் காரீயம் ஆகியவை மாநிலத்தின் சில பகுதிகளில் காணப்படுகின்றன.

18) தமிழ்நாட்டின் பல்வேறு போக்குவரத்து முறைகளை விவரி.

**பதில் : சாலைப் போக்குவரத்து;**

1. மாநிலத்தின் மொத்த சாலைகளின் நீளம் 1,67,000 கிலோமீட்டர் ஆகும். இதில் 60,628 கிலோமீட்டர் மாநில நெடுஞ்சாலைகள் துறை மூலம் பராமரிக்கப்படுகிறது.

2. பொதுத்துறை மற்றும் தனியார்துறை கூட்டாரி இயக்க திட்டத்தின் கீழ் மொத்த சாலை திட்டங்களில் 20% பங்களிப்புடன் தமிழ்நாடு இந்தியாவில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

**இரயில்வே போக்குவரத்து:**

1. தெற்கு இரயில்வேயின் தலைமையகம் சென்னையில் அமைந்துள்ளது. தெற்கு இரயில்வே வலைப் பின்னலில் தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி, கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேசத்தின் சில பகுதிகள் அடங்கும்.

2. இம்மண்டலத்தில் 600 இரயில் நிலையங்கள் உள்ளன.

3. இந்த இரயில்வே வலைப்பின்னல் அமைப்பு இந்தியாவின் முக்கிய நகரங்களை இணைக்கிறது.

4. சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகியவை இம்மாநிலத்தில் உள்ள முக்கிய இரயில் சந்திப்புகள் ஆகும்.

5. சென்னை புறநகர் இரயில் போக்குவரத்து மற்றும் பறக்கும் தொடருந்துத் திட்டம் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது. நற்பொழுது மெட்ரோ இரயில்வே அமைப்பும் மே 2017 முதல் பாதாள இரயில் இயக்கத்துடன் இப்போக்குவரத்து விரிவாக்கம் செய்து வருகிறது.

**வான்வழி போக்குவரத்து :**

1. தமிழ்நாட்டில் 4 முக்கிய சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன. அவை சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகியனவாகும்.

2. தூத்துக்குடி மற்றும் சேலம் ஆகியன உள்நாட்டு விமான நிலையங்கள் ஆகும். இது நம் நாட்டின் பல பகுதிகளை இணைக்கிறது.

3. தொழில் துறையின் அதீத வளர்ச்சி, பயணிகள் போக்குவரத்து மற்றும் சரக்கு போக்குவரத்துகளை அதிகரித்துள்ளது. இது ஆண்டிற்கு 18 சதவீதத்திற்கும் அதிகமான விமான போக்குவரத்து வளர்ச்சியை ஏற்படுத்துகிறது.

**நீர்வழிப் போக்குவரத்து:**

1. சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி தமிழ்நாட்டின் மூன்று முக்கிய துறைமுகங்களாகும்.

2. நாகப்பட்டினத்தில் இடைநிலை துறைமுகமும் பிற பகுதிகளில் 15 சிறிய துறைமுகங்களும் உள்ளன.

3. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சிறிய துறைமுகங்களும் தமிழ்நாட்டின் கடல்சார் வாரியத்தால் நிர்வகிக்கப்படுகிறது.

19) நீர்வள மேலாண்மை என்றால் என்ன? விரிவாக எழுதவும்.

**பதில் :** 1) நீர்வள மேலாண்மை என்பது திட்டமிடல், செயல்படுத்துதல், நீர்வளத்தைப் பெருக்குதல், விநியோகித்தல் மற்றும் நீர்வளங்களின் உகந்த பயன்பாட்டை நிர்வகிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதற்கும்.

2) தமிழ்நாட்டில் மக்கள் தொகை அதிகரிப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் தனிநபரின் நுகர்வு காரணமாக நீரின் தேவை மிகவும் அதிகமாக அதிகரித்துள்ளது.

3) தமிழ்நாட்டின் தனிநபர் நீர்நுகர்வின் அளவு 900 கன மீட்டர் ஆகும். இது தேசிய சராசரியான 2,200 கனமீட்டரை ஒப்பிடும் பொழுது குறைவானதாகும்.

4) மாநிலத்தில் உள்ள நீர்வளத்தில் 75 சதவீதம் வேளாண்மைக்காக நுகரப்படுகிறது. மக்கள் நீர் பயன்பாடு மற்றும் தொழில் துறைக்கான தேவைகள் மற்றும் இதர தேவைகளுக்கான பயன்பாடு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து வருகின்றது.

5) மாநிலம் நீர் தேவைக்கு பருவமழையைப் பெரிதும் சார்ந்துள்ளது. நீர் வளங்களைப் புதுப்பித்துக்கொள்ள மழையையே முழுமையாகச் சார்ந்துள்ளது.

6) பருவ மழை பொய்ப்பதால் கடுமையான நீர் வழி வகுக்கின்றன. எனவே நீர் சேமிப்பது நமக்கும் வருங்கால சந்ததியினருக்கும் பயனுள்ளதாக அமையும்.